மாண்புமிகு திரு செ. மாதவன் : இப்போதே நம்முடைய நாட்டில் அத்தகைய காம்போசிட் மில்கள் 24 இருக்கின்றன. வெறும் நூற்பாலைகள் மட்டும் 192 இருக்கின்றன, அந்த நூற்பாலைகள் எல்லாம் காம்போசிட் மில்லாக மாறி வரவேண்டுமென்றுதான் நூற்பாலைச் சொந்தக்காரர்கள் விரும்புகிருர்கள். அதற்கான பண வசதி இல்லாத காரணத்தால் தயக்கம் காட்டுகிருர்கள்.

பொறியாளர்கள் ஓய்வு பெறும் வயது

***488 விஞ.—திரு. வி. கே. கோதண்டராமன் :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட விஞக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இஞ்சினீயர்களை வேலையிலிருந்து 55 வயதில் ஓய்வு பெற வேண்டுமென்ற உத்திரவு போடப்பட்டதா ?

(இ) ஆம் எனில், அதன் காரணமாக யார் யாருக்கு நோட்டீஸ் கொடுக்கப்பட்டது ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) கீழ்க்கண்டவர்கள் ஓய்வு பெற வேண்டுமென அறிவிப்பு கொடுக்கப் பட்டது.

1. பொதுப்பணித்துறை

(i) பொது தலைமைப் பொறியாளர், பொதுப்பணித்துறை.
(ii) மேற்பார்வைப் பொறியாளர் .. ஒருவர்.
(iii) நிர்வாகப் பொறியாளர் .. ஒருவர்.
(iv) மின்சாரப் பொறியாளர் .. ஒருவர்.
(v) உதவிப் பொறியாளர்கள் .. எண்மர்.

2. நெடுஞ்சாலை—கிராமப்பணி

(i) தலைமைப் பொறியாளர் (நெடுஞ்சாலை–கிராமப்பணி).
(ii) மேற்பார்வைப் பொறியாளர் .. நால்வர்.
(iii) கோட்டப் பொறியாளர் .. .. ஒருவர்.
(iv) உதவிப் பொறியாளர்கள் .. அறுவர்.

திரு. வி. கே. கோதண்டராமன் : இதில் யாருக்காவது 55 வயதுக்கு மேல் ஓய்வு பெற்றும் எக்ஸ்டன்ஷன் அளிக்கப்பட்டதா ? அதில் யாராவது உயர்நீதி மன்றத்தில் வழக்குத் தொடுத்தது உண்டா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: ஓய்வு பெற்ற பின்னர் மீண்டும் தலைமைப் பொறியாளர் (நெடுஞ்சாலை—கிராமப் பணிகள்) ஒருவருக்கு ஓராண்டுக் காலம் அதிக நீட்டிப்பு கொடுக்கப்பட்டது. ஹவுசிங் போர்டில் இருக்கும் எஞ்சினியர் ஒருவருக்கும் எக்ஸ்டன்ஷன் கொடுக்கப் பட்டது. நீதிமன்றத்திற்குப் போனது பற்றிய விவரம் இல்லை.

திரு. எஸ். இராமச்சந்திரன் : அதிகாரிகள் விரும்பினுல் 50 வயதில் ஓய்வு பெற்றுவிடலாம் என்ற கருத்தை இந்திய அரசாங்கம் பரிசீலித்து வருகிறது. அது சம்பந்தமாக நம்முடைய அரசை அவர்கள் கலந்தார்களா ? அதன் மீது யோசனை தெரிவிக்கப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: அப்படி ஒன்றும் யோசனை கொடுக்கப்படவில்லை.

1969 மார்ச் 26]

திரு. வி. கே. கோதண்டராமன் : ஒன்றிரண்டு பேர்களுக்கு மட்டும் இதுபோன்ற விதிவிலக்கு அளிப்பதற்கான காரணம் என்ன? அந்த அளவிற்கு திறமையுடையவர்கள் வேறு யாருமில்லை என்பது பொருளா? பல பேர்களுக்கு ப்ரமோஷன் கிடைக்கவில்லை என்று எண்ணிக்கொண்டிருக்கக் கூடிய இந்த நேரத்தில் ஒன்றிரண்டு பேர்களுக்கு மட்டும் ஏன் விலக்கு அளிக்கப்பட்டது? மு.ப. 9–30

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: ஓய்வுபெற்ற பின்னர் மீண்டும் தலைமைப் பொறியாளராக (நெடுஞ்சாலை—கிராமப் பணிகள்) அமர்த்தக் காரணம், அவருடைய பணிக்குறிப்புகள் தொடர்ந்து நல்ல முறையில் இருந்தன. தலைமைப் பொறியாளராகத் தேர்ந்தெடுக்கப்படத் தகுதிவாய்ந்த இரு மேற்பார்வைப் பொறியாளர்களில் ஒருவர் ஒழுங்கு நடவடிக்கை வழக்கு, தீர்ப்பு மன்ற விசாரணையிலிருக்கிறார். மற்றவர் இரண்டு ஆண்டுகள் மட்டுமே மேற்பார்வைப் பொறியாளராகப் பணிபுரிந்து நிலையான வட்டங்களின் பொறுப்பை மேற்கொள்ளும் வாய்ப்பைப் பெறாமல் இருந்தார்.

இன்னொருவர், ஸ்டேட் ஹவுஸிங் போர்டு சட்டவிதிமுறைகளின்படி மூன்று ஆண்டுகள் தொடர்ந்திருக்கலாம் என்று விதியிருப்பதால் அது அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

திரு. கே. போஜன்: நம் மாநிலத்தில் பொறியியல் பயிற்சி பெற்றவர்கள் அநேகம் பேர்கள் வேலையில்லாமல் திண்டாடிக்கொண்டிருக்கும்போது, அவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைப்பதற்கு ஏற்பாடு செய்ய இவ்விதம் ஓய்வு பெற்றவர்களுக்கு விலக்கு அளித்து அவர்களை வேலையில் ஈடுபடச் செய்வதைத் தடுக்க, அரசு இனிமேலாவது ஆலோசனை செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ் ஜே. சாதிக் பாட்சா: வேலைவாய்ப்பை உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்ற காரணத்தினால்தான் ஏற்கனவே 58 வயது என்றிருந்தது 55 ஆகக் குறைக்கப்பட்டிருக்கிறது. இதில் யாருக்கும் வேலை நீடிப்பு தரவில்லை. இப்போது கூட ஒருவர்தான் நீடிப்பில் இருக்கிறார். அது பப்ளிக் வொர்க்ஸ் டிப்பார்ட்மெண்ட் பற்றியது. இன்னொரு அதிகாரி ஸ்டேட் ஹவுஸிங் போர்டுக்கு மாற்றப்பட்டுவிட்டதால் அந்தப் பிரச்சினை இதில் எழவில்லை.

சிறைக் கைதிகள் விடுதலை

*489 **வினா.—திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு தொழிலாளர் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) இந்த அரசு பொறுப்பேற்ற பின்னர் 1968 பிப்ரவரி முடிய, தண்டனைக்காலம் முடிவுறாத எத்தனை சிறைக் கைதிகளை விடுதலை செய்துள்ளது, மாவட்டவாரியாக?

(இ) எந்தெந்த வேளைகளில்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ)—

	மாவட்டங்கள்.	விடுதலை செய்யப்பெற்ற கைதிகளின் எண்ணிக்கை.
1	சென்னை	263
2	செங்கற்பட்டு	196
3	வட ஆர்க்காடு	372

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS